**OS NO.124/2017** **Date: 06.08.2025**

ரமேஷ் (DW2)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

காட்பாடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கில் இந்த வழக்கின் வாதி என் மீது எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வேலூர் மாவட்ட நீதிமன்றத்தில் ரகுபதி தொடர்ந்த வழக்கிற்கும் இந்த வழக்கின் வாதிக்கும் ஏதாவது தொடர்பு உண்டா என்றால் இல்லை. இந்த வழக்கில் வாதி தாவாவில் குறிப்பிட்டுள்ள அனைத்து விவரங்களும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி என் மீது ஏதாவது நிவாரணம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. நான் 1ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தை குறித்து பொது அதிகாரம் பத்திரம் எழுதிக்கொடுக்கும் முன்பு வில்லங்கம் அனைத்தும் ஆவணங்களையும் இரத்து செய்து தான் கொடுத்தேனா என்றால் ஆமாம். நான் 1ம் பிரதிவாதிக்கும் பொது அதிகாரம் பத்திரம் எழுதிக்கொடுக்கும் போது இரத்து செய்த அனைத்து ஆவணங்களையும் இந்த நீதிமன்றத்தில் பி.வா.சா.ஆ–2 முதல் பி.வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். குடியாத்தம் நகர காவல் நிலைய குற்ற எண்.32/2018 வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் வாதிக்கும் ஏதாவது தொடர்பு உண்டா என்றால் வாதிக்கு தொடர்பு இல்லை, ஆனால் 1ம் பிரதிவாதிக்கு தொடர்பு உண்டு. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.8 நான் எழுதிக்கொடுத்த கடிதத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை, அதை நான் எழுதிக்கொடுக்கவில்லை. எனக்கு வாதியின் மூலம் தான் 1ம் பிரதிவாதியை எனக்கு தெரியும் என்று நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ள

சங்கதிகளின் படி வாதிக்கும் எனக்கும் எந்த தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. எனது சொந்த ஊரில் உள்ள எனது வீட்டின் மேல் நான் ஏதாவது கடன் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். அந்த கடன் தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் தண்ணீர் வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி வியாபாரம் செய்து வரும் போது அந்த கடைக்கு நான் சரியாக வாடகை தாராத காரணத்தினால் அந்த உரிமையாளர் என் மீது வழக்கு தாக்கல் செய்து அது தற்போது நிலுவையில் உள்ளது என்றால் அந்த வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. (மேற்படி கேள்வி 2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு பதிவு செய்யப்படுகிறது). இதே நீதிமன்றத்தில் குடியாத்தம் ரகுபதி தொடர்ந்த வழக்கில் நிறைவேற்று மனு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் தண்ணீர் வியாபாரம் செய்யும் போது வியாபாரத்திற்காக ஒரு வேன் வாங்கி வைத்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வேனிற்கும் சரிவர கடன் கட்ட முடியாததால் அவர்களிடமே அந்த வேனை திருப்பி கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் நான் முதல் விசாரணையில் கூறியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய் என்றும் சொன்னால் சரியல்ல. வாதிக்கும் எனக்கும் சம்மந்தம் உள்ளது என்பதை நிரூபிக்க நீதிமன்றத்தில் ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் உள்ள சொத்திற்கு எனது சித்தப்பாவிற்கு வழக்கு நிலுவையில் இருக்கும் போது ஏதாவது அடமானம் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய சாட்சியம் உண்மைக்கு முரணாக உள்ளதால் எனது சாட்சியம் ஏற்கதக்கது

அல்ல என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ளபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

(1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)